EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

<u>ஆன்டாரியோ வேலை வங்கி</u>

ஆன்டாரியோ வேலை வங்கி (Ontario Job Bank) என்பது எல்லாக் கனடியர்களுக்கும் கிடைக்கும் ஒரு வலையம் சார்ந்த வேலைப் பதிவுகளின் வலைப்பின்னலாகும். இந்த பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள வேலைகளை ஆன்டாரியோவின் எல்லாப் பகுதிகளிலிருந்துமல்லாமல் கனடா முழுவதிலிருந்தும் வேலை தேடுபவர்கள் காணலாம்.

**என்னென்ன சேவைகள் கிடைக்கும்?**

ஆன்டாரியோ வேலை வங்கியில் உள்ள வேலை விளம்பரங்களை அடைய:

- **www.jobbank.gc.ca** வைச் சொடுக்கவும்
- **English** அல்லது **French**த் தேர்ந்தெடுக்கவும்
- முகவுரைப் பக்கத்தில் **Job Search** என்பதைச் சொடுக்கவும்.
- **Ontario** வை (அல்லது வேறு எந்த மாநிலத்தையாவது) தேர்ந்தெடுக்கவும்.
- முக்கியச்சொல், வேலைப் பெயர், வேலை எண், ஆன்டாரியோவின் இருப்பிடங்கள், அல்லது பதிவு செய்யப்பட்ட நாள், அல்லது புதிதாய் பதிவு செய்யப்பட்ட வேலைகளின் விளம்பரங்கள் ஆகியவை மூலம் உங்கள் வேலை தேடுதலை பண்படுத்தவும்.

வேலை தேடுபவர்கள் ஆன்டாரியோ வேலை வங்கியின் இணையத்தளத்தின் முகவுரைப் பக்கத்திலிருந்து மேலும் அதிகப்படியான முக்கிய விவரங்களைப் பெறலாம். இந்த முக்கிய விவரங்களில் கீழ்கண்டவை அடங்கும்:

- **ஒத்த வேலை (Job Match)**, இது வேலை தேடுபவர்கள் தங்களுக்கே சொந்தமான வேலைக் குறிப்பை உருவாக்கவும் மற்றும் அதைச் சாத்தியமான வேலை கொடுப்பவர்களுக்கு விளம்பரப்படுத்தவும், மேலும் அவர்களின் திறமைகளுடன் ஒத்த வேலை வாய்ப்புகளின் விவரப் பட்டியலைப் பெறவும் வழி வகுக்கும்.
- **வேலை எச்சரிக்கை (Job Alert)**, இது வேலை தேடுபவர்கள் தங்களின் தனித்த தேடுதல் அளவைக்கு ஒத்த வேலை வாய்ப்புகளின் விவரப் பட்டியலை மின்னஞ்சல் மூலம் பெற வழி வகுக்கும்.
- **தொழில் வழிகாட்டி (Career Navigator)**, இது தொழில் தீர்மானங்களுடன் இருக்கும் தனிப்பட்டவர்களுக்கு உதவும் வழிகாட்டி உபகரணமாகும்
- **திறமைச்சுருக்கம் உருவாக்கல் (Resume Builder)**, இது திறமைச்சுருக்கத்தைத் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது மத்திய அரசின் வேலைகளுக்கு இணையம் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கவோ உருவாக்க உதவும்.

யார் இந்தச் சேவைகளைப் பெறலாம்?

எல்லோருக்கும் ஆன்டாரியோ வேலை வங்கியின் எல்லா முக்கிய விவரங்களும் கிடைக்கும்.

நீங்கள் கனடியப் பிரஜையாகவோ (Canadian citizen) அல்லது கனடாவின் நிரந்தர வசிப்புரிமை (permanent resident of Canada) பெறாதவராகவோ இருந்தால் நீங்கள் கனடாவில் வேலை செய்யத் தொடங்கும் முன் உங்களுக்கு வேலை செய்வதற்குரிய சட்டபூர்வ அதிகாரம் தேவைப்படலாம். மேலும்

விவரங்களுக்கு, கனடியப் பிரஜா உரிமை மற்றும் குடிபுகல் அலுவலகத்தை (Canadian Citizenship and Immigration office) தொடர்பு கொள்ளவும் அல்லது அவர்களது இணையத்தளத்தை http://www.cic.gc.ca என்ற இடத்தில் அடையவும்.

**மேலும் தகவலை நான் எப்படிப் பெறலாம்?**

மேலும் தகவல் ஆன்டாரியோ வேலை வங்கியின் www.jobbank.gc.ca என்ற இணையத்தளத்தில் உள்ளது.